கொபெய்கனே பிரதேச சபை - 2023

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொபெய்கனே பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொபெய்கனே பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i

)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம், முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இயந்திர உபகரணங்களின் கீழ் உள்ள பெகோ இயந்திரம் ரூபா 3,000,000 மதிப்பீட்டு பெறுமதியான குபோடா கைடெக்டரை மதிப்பீட்டு பெறுமதியாக கருதி மோட்டார் வண்டி மற்றும் கரத்தை கணக்கில் கணக்கீடு செய்தமையால் மோடார் வண்டி மற்றும் கரத்தை கணக்கு ரூபா 2,853,000 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு கஹடகஹமுலஹேன காணியின் பெறுமதி ரூபா 100,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (இ) | ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 41,100 ஆன தளபாடங்கள் உபகரண 03 உருப்படிகள் மற்றும் பெறுமதி ரூபா 364,452 ஆன இயந்திர உபகரண 07 உருப்படிகள் 2023 ஆண்டு திசெம்பர் 31 திகதி வரை சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு கைத்தொழில் வைப்பு பதிவேட்டில் காணப்பட்ட தீர்தமையினை உறுதிப்படுத்தப்படாத கூட்டுப் பெறுமதி ரூபா 3,470,707 ஆன 55 கைத்தொழில் வைப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | வைப்புக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 79,205 ஆன கடன்கொடுனர் மீதியொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 03 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மீதிகள் மற்றும் அதற்குரிய அட்டவணைகளின் நிலவிய மீதிகளிற்கிடையே ரூபா 93,383 ஆன இணக்கமின்மை ஆனது. | சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதென. | நிதிக்கூற்றுக்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய அட்டவணைகளை சரியாக தயாரிக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 279,926 ஆன ஊழியர் கடன் மீதியை உறுதிப்படுத்தி கொள்வதற்கு தேவையான பதிவேடுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. | இந்த கடன்கொடுனர் மீதி 2013.12.31 திகதி முதல் இறுதிக் கணக்குகளில் கூடுதலாக காண்பிக்கப்படுவதுடன் , அதற்கு முன்னரான விடயங்களை கண்டறிய தேவையான பதிவேடுகள் மற்றும் கோவைகள் சபையிடம் இல்லை. இறுதி கணக்குகளில் இந்த மீதி கூடுதலாக காண்பிக்கப்படுவதனால் அட்டவணை ஊடாக உறுதிப்படுத்த முடியவில்லை என. | கடன்கொடுனர் மீதிகளை முறையாக வரைவில் தீர்க்க வேண்டும். |

1.7 **இணங்காமைகள்**

1.7.1 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் வைப்புக்கள் தொடர்பான பட்டியல்களை தயாரிக்க வேண்டிய போதும் சபை அவ்வாறு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டு முதல் வைப்பு பட்டியலை அரையாண்டிற்காக தயாரிக்கப்படுமென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது நிருவாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2015 நவம்பர் 02 திகதிய இலக்கம் 03/2015 கொண்ட சுற்றறிக்கை | வீதி விளக்கு பதிவேட்டை நாளாதுவரையாக பேணியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | 2002 பெப்ரவரி 25 திகதிய இலக்கம் 1/2002 கொண்ட கடிதம் | சுற்றறிக்கையின் 3, 4, 6.3 மற்றும் 6.5 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | உள்ளூராட்சி சுற்றறிக்கை | | | |
| | 2010 ஜுலை 30 திகதிய இலக்கம் 2010/02 கொண்ட உள்ளூராட்சி திணைக்கள சுற்றறிக்கையின் 1.2. பிரிவு | விடய மாற்ற முறை மற்றும் அவ்வாறு செய்ய கடினமான அலுவலர்களிற்காக 02 ஆண்டுகளிற்கு ஒரு முறை பிரிவு மாற்ற முறையொன்றை செயற்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டு முதல் செயற்படுத்துவதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஈ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| | 218 விதி | விதி பிரகாரம் நியமிக்கப்படும் சபை ஒன்றினால் வருடாந்த காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டிய | வருடாந்த காணி கணிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொள்ள 2023 இல் ஆரம்பிக்கப்பட்டு | விதி, அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | உள்ளதுடன், காணி மற்றும் கட்டிடங்களில் 51 இன் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென. | |
| (உ) | அரச பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் 4.2.1 (ஆ) வழிக்காட்டி | சபையினால் 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பிரதான பெறுகை திட்டத்தின் குறைந்த பட்சம் 03 வருட காலத்திற்காக எதிர்பார்கப்படும் பெறுகைகள் நடவடிக்கைகள் பட்டியற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆண்டு முதல் பிரதான பெறுகை திட்டத்தை குறைந்த பட்சம் எதிர் வரும் 03 ஆண்டுகளிற்காக எதிர்பார்க்கும் பெறுகைகள் நடவடிக்கைகளை பட்டியற்படுத்தி பேணிச்செல்ல நடவடிக்கை எடுப்பதென. | வழிக்காட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 9,379,462 ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,294,652 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

சேயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | 2023 ஆண்டு | | | | 2022 ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை (பட்டியலிட்ட வருமானத்தில்) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை (பட்டியலிட்ட வருமானத்தில்) |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரி மற்றும் வரி | 751 | 721 | 543 | 383 | 749 | 749 | 749 | 122 |
| வாடகை | 742 | 742 | 690 | 48 | 700 | 700 | 104 | 596 |
| அனுமதிப்பத்திரகட்டணம் | 1000 | 486 | 486 | - | 1,000 | 1,000 | 643 | 357 |
| ஏனைய வருமானம் | 69 | 69 | 63 | 6 | 22 | 22 | 15 | 43 |
| | ------- | ------- | ------- | ----- | ------- | -------- | ------- | ------- |
| மொத்தம் | 2,562 | 2,018 | 1,782 | 437 | 2,471 | 2,471 | 1,511 | 1,118 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று மொத்த நிலுவை வீதவரி மீதியான ரூபா 325,363 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய வீதவர மீதியினுள் முன்னைய ஆண்டுகளிலிருந்து நிலவி வரும் ரூபா 12,773 ஆன இனங்காண வித்தியாசமொன்று காணப்பட்டதுடன் அதனை மீளாய்வாண்டினுள் இனங்கண்டு தீர்த்திருக்கவில்லை. | நிலுவை வீதவரி மீதியை எதிர்காலத்தில் அறவிடவும், உரிமையாளரை இனங்காணாத ஆதனங்களின் உரிமையாளர்களை இனங்காணவும், இனங்காணப்படாத மீதியை எதிர்காலத்தில் இனங்காணவும் நடவடிக்கை எடுக்கப்படுமென. | நிலுவை வீதவரி மீதியை எதிர்காலத்தில் அறவிடவும், உரிமையாளரை இனங்காணாத ஆதனங்களின் உரிமையாளர்களை இனங்காணவும், இனங்காணப்படாத மீதியை எதிர்காலத்தில் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வீதவரி மதிப்பீட்டை 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பீட்டு செய்ய வேண்டிய போதும் பிரதேச சபையினால் 2015 ஆண்டின் வீதவரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வீதிவரி அறவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென | வீதவரி மதிப்பீட்டை காலரீதியாக மேற்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி பெறவேண்டிய 11 கணக்கு மிதிகளின் பெறுமதி ரூபா 64,217,666 ஆனது. | நிலுவை மீதிகள் தொடர்பான விடயங்களை கண்டறிந்து எதிர்காலத்தில் சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சபைக்கு அறவிட வேண்டிய மீதிகளை விரைவில் அறவிட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 13,694,207 தொகை மற்றும் முன்கூட்டிய பெறுவனவு ரூபா 27,448 உமானது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவில் தீர்க்க வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சபை கடமைகளில் ஈடுபட்டிருக்காத ஊழியர்களின் கடன் மீதியினுள் 10 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்துத நிலவும் ரூபா 279,926 ஆன வித்தியாசத்தை உரியவாறு இனங்கண்டு தீர்த்து இருக்கவில்லை. | இனங்காணத மீதிகளை எதிர்காலத்தில் இனங்காணவும் அறவிட வேண்டிய கடன் மீதகளை அறவிடவும் நடவடிக்கை எடுப்பதென. | அறவிட வேண்டிய மீதிகளை முறையாக இனங்கண்டு அறவிட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதி விளக்கு பதிவேடு நாளாதுவரையாக இல்லாததால் சபைக்கு சொந்தமாக காணப்படும் வீதித் தூண்கள் அனைத்தையும் தரவுத் தொகுதியிற்கு உள்ளீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதென. | வீதி விளக்கு பதிவேடுட்டை மற்றும் தரவுத் தொகுதியை நாளாதுவரையாக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 25 - ரூபா 300 இற்கிடையிலான பெறுமதியுடைய 43 காணிகளானது காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்து காணப்படுவதுடன், காணிகளின் பெறுமதியை புதிய சந்தை பெறுமதிக்கு மதிப்பீடு செய்திருக்காததால் சொத்துக்களின் உண்மையான பெறுமதி கணக்குகளில் பிரதிபழிக்கவில்லை. | காணி மதிப்பீட்டிற்காக போதிய நிதி ஏற்பாடு பிரதேச சபையிடம் இல்லாததால் ஏற்பாடு கிடைத்தவுடனே மதிப்பீடு செய்ய நடடிக்கை எடுப்பதென. | காணிகளின் பெறுமதியை புதிய சந்தை பெறுமதிக்கு மதிப்பீடு செய்ய வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான 04 காணிகளின் உரிமையை சுவீகரித்திருக்காததுடன் அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 4,187,431 தொகை செலவிடப்பட்டிருந்தது. | சுவீகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதென. | இச் சொத்துக்களின் உரிமையை சுவீகரித்துக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | சபையினால் பராமரிக்கப்படும் 50 மயானங்களில் 33 இனது உரிமை சபைக்கு சொத்தமாக இருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகார ஆளணியினரினுள் 12 வெற்றிடங்கள் ஆனது | அவதானிப்புடன் இணங்குவதென. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஒழுக்க முரணாக செயலைச் செய்ததற்காக 2022 ஆண்டில் நவம்பர் மாதம் பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர் தொடர்பான குறித்த புலனாய்வு நடவடிக்கைகள் 2023 திசெம்பர் 31 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முன் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய விதம் குறித்து ஆலோசனை வழங்குமாறு கோரி உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | புலனாய்வு நடவடிக்கைகளை விரைந்து முடிக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் உள்ளக் கணக்காய்வு அலகை நிறுவி அதன் கடமைக்காக அலுவலர் ஒருவரை நியமித்திருந்த போதும் மீளாய்வாண்டினுள் 02 கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் விநியோகித்திருந்ததில் உசிதமான மற்றும் போதிய கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆண்டினுள் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் உரியவாறு மேற்கொள்ளப்படுமென. | சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக உசிதமான மற்றும் போதிய கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | 2023 ஆண்டிற்குரியதாக முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு கூட்டங்கள் 3 மாத்திரம் நடாத்தி இருந்தன. | -மேற்படி- | -மேற்படி- |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமான விடயங்கள் 05 இல் மதிப்பிட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 28 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டது. | ஏற்றுக் கொள்ளவதென. | வருமான மதிப்பீடு நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும் |
| (ஆ) | செலவின விடயங்கள் 07 இல் மதிப்பிட்ட ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 20 சதவீதத்திலும் கூடிய விலகல் காணப்பட்டது | -மேறபடி- | செலவின மதிப்பீடு நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும் |